සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

**கத்தோலிக்கத் திருமறை / කතෝලික ධර්මය ~ I**

தரம் : **10** நேரம்: 1 மணித்தியாலம்

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக. மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க**

1. திருவிவிலியத்தில், பழைய ஏற்பாட்டில் உள்ள நேகேமியா நூல் வகைப்படுத்தப்பட்டுள்ள பிரிவானது
   1) சட்ட நூல்கள் பிரிவினுள் ஆகும்
   2) ஞான நூல்கள் பிரிவினுள் ஆகும்
   3) வரலாற்று நூல்கள் பிரிவினுள் ஆகும்
   4) இறைவாக்கினர் நூல்கள் பிரிவினுள் ஆகும்

2. மீட்பின் வரலாற்றை விளக்கும் பழைய ஏற்பாட்டின் முக்கிய நோக்கமாவது
   1) வரலாற்று நிகழ்வுகளை எடுத்துரைப்பது
   2) இஸ்ராயலிடையே இறை நம்பிக்கையை வளர்ப்பதாகும்
   3) இஸ்ராயல் மக்களின் வாழ்க்கை வரலாறு எடுத்துரைப்பது
   4) மனித வரலாற்றை எடுத்துரைப்பது

3. தூய லூக்கா, தூய பாவுலுடன் இணைந்து சென்ற தூதுரைப்பயணங்களாவன,
   1) முதலாம் - இரண்டாம் பயணம்
   2) முதலாம் - மூன்றாம் பயணம்
   3) இரண்டாம் - மூன்றாம் பயணம்
   4) முதலாம் - இரண்டாம் - மூன்றாம் பயணம்

4. திருத்தூதர் பணி நூலின் அமைப்பினை ஒழுங்காகக்கொண்ட விடைத் தொகுதியை தெரிவு செய்க.
   A. யூதேயா - சமாரியாவில் சான்று பகிர்தல்
   B. மறைபரப்பு பணி ஆயத்தம்
   C. தூய பவுலின் மறைத்தூதுப் பணி
   D. எருசலேமில் சான்று பகிர்தல்
   1) A,B,C,D 2) B,A,D,C 3) A,C,B,D 4) B,D,A,C

5. தூய பவுலின் திருமுகங்களில் வெளிப்படும் பிரதான கருப்பொருளானது
   1) அவரது திருமுகங்களின் திறமைகளின் வெளிப்பாடு
   2) அவர் கிறிஸ்துவில் கொண்டிருந்த விசுவாசம்
   3) அவர் ஒரு சிறந்த வைத்தியரும், ஓவியரும் என்பது
   4) அவரின் தலைமைத்துவமும் பல்வேறு சபைகளுடன் அவர் கொண்டிருந்த தொடர்பும்

6. தூய பவுல் சபைகளை தனிப்பட்ட முறையில் தரிசிக்க முடியாதபோது அச்சபைகளை வழிப்படுத்திய விதமாவது யாது?
   1) அச்சபைகளுக்கு தலைவர் நியமித்தமை
   2) அவர்களுக்கு பொது அறிவுரை வழங்கியமை
   3) வேறு நபர்கள் அனுப்பி வழிப்படுத்தியமை
   4) திருமுகங்கள் மூலம் வழிகாட்டியமை

7. போலி ஆசிரியர்களின் தவறான கற்பித்தலில் இருந்து கிறிஸ்தவர்கள் பாதுகாப்பதற்காக எழுதப்பட்ட திருமுகம் எது?
   1) எபேசியர் 2) உரோமர் 3) பிலிப்பியர் 4) கொலோசையர்

8. தீய சக்திகள் அழிக்கப்பட்டு, நம்பிக்கை கொண்டோருக்கு வளமான காலம் உதயமாகும் என்பதை கூறும் வெளிப்பாட்டு இலக்கியப் பண்பானது
   1) இருதன்மைகள் 2) இறுதிக் காலம்
   3) அடையாளப் பயன்பாடு 4) புனைப்பெயர்களை முன்வைத்தல்

9. வெளிபாட்டு இலக்கியம் உருவாக காரணமாக அமைந்தது,
   1) இஸ்ராயேல் வரலாற்றில் இறைவாகினர் அருகிப்போன இருண்ட யுகத்தில் மக்களை திடப்படுத்துவதற்கு
   2) இஸ்ராயேல் இறைவாக்கினரின் விசுவாசம் வளர்ச்சியடையும்போது
   3) அப்போஸ்தலர் காலத்தில் மக்களை திடப்படுத்துவதற்கு
   4) ஆரம்ப திருச்சபை வளர்ச்சியடையும்போது அதை பாதுகாப்பதற்கு

10. தொமீசியன் பேரரசனின் காலத்தில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டமைக்கு பிரதான காரணமாவது,
   1) கிறிஸ்துவை பின்பற்றியமை
   2) உரோம பேரரசனை கடவுளாக வணங்கி, வழிபடாமை
   3) உரோமபேரரசனுக்கு வரி செலுத்தாமை
   4) சீசருடைய பணப் புழக்கத்தை ஏற்காமை

11. ஞான இலக்கியமான சீராக்கின் ஞானம் எனும் நூல் எமக்கு தரும் படிப்பினையாவது
   1) அரச, மற்றும் ஏனைய நிர்வாகம் பற்றிய விளக்கம்
   2) வாழ்வின் சிக்கல்கள் - தீர்வுகள் பற்றிய விளக்கம்
   3) குடும்பம் - கோத்திரம் என்பவற்றை பாதுகாக்கும் வழிமுறைகள்
   4) அன்றாட சவால்களை வெற்றிகொள்ளும் விளக்கம்

12. “நீ மெசியாதானா? என்ற யூத மூப்பர் சங்கத்தின் வினாவிற்கு இயேசு அளித்த பதில் என்ன?
   1) நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவில் கொள்ளும்
   2) தந்தையே இவர்களை மன்னியும்
   3) தந்தையே உம்கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்
   4) இது முதல் மானிடமகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பார்

13. ஆதாம் ஏவாள் செய்த பாவத்தின் பின் கடவுள் வாக்களித்த மீட்பு மனித குலத்திற்கு உரித்தாகக் காரணமாக அமைந்த நிகழ்வானது
   1) இயேசு இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தது
   2) எம்மாவுஸ் சென்ற சீடருக்கு காட்சி கொடுத்தமையாகும்.
   3) பாஸ்கு ஞாயிறு சீடர்களுக்கு காட்சி கொடுத்தமையாகும்
   4) மகதலா மரியா காலையில் கல்லறை சென்றமையாகும்

14. திருவெளிப்பாட்டு நூலில் புதியவானம், புதிய பூமி என குறிப்பிடப்படுவது
   1) தூய திருச்சபையை 2) விண்ணக வாழ்வை
   3) வானம் - பூமி 4) உலகப் படைப்பை

15. பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த யூதர்கள் வருடம் தோறும் எருசலேம் யாத்திரை சென்றமைக்கான காரணம்
   1) விருந்தோம்பலில் பங்குகொள்ளவாகும்
   2) குழந்தைகளின் திருநாளில் பங்குபற்றவாகும்
   3) பெந்தகோஸ்து விழா கொண்டாடுவதற்காகும்
   4) ‘சபத்’ நாள் கடமைகளை நிறைவேற்றவாகும்

16. ஆதித் திருச்சபையின் வளர்ச்சி பற்றி கூறும் நூலானது
   1) சீராக்கின் ஞானம் 2) தூய யோவன் நற்செய்தி
   3) தூய பவுலின் திருமுகங்கள் 4) திருத்தூதர் பணி

17. தூய சந்தியாகு முனிவர் என அழைக்கப்படும் திருத்தூதர் யார்?
   1) தூய அந்திரே 2) தூய செபஸ்தியார்
   3) தூய அந்தோனியார் 4) தூய யாக்கோபு

18. தூய பவுலின் வாழ்வில் மாற்றம் ஏற்படக் காரணமாகவிருந்த சம்பவமானது
    1) மறை பரப்பு பணியின் போது ஏற்பட்ட அனுபவம்
    2) வாழ்வில் ஏற்பட்ட வெறுப்பு
    3) உயிர்த்த கிறிஸ்து அவருடன் உரையாடியமை
    4) தூய ஆவியை பெற்றுக்கொண்டமை

19. தூய பவுல் அடிகளார் தர்சு நகரில் மறைபரப்பு பணி ஆற்றியது, அவரின்
    1) முதலாம் தூதுரைப் பணியின் போது
    2) இரண்டாம் தூதுரைப்பணியின் போது
    3) மூன்றாம் தூதுரைப் பணியின் போது
    4) அனைத்து தூதுரைப் பயணத்தின் போதும்

20. தூய பவுல் தமது மூன்று தூதுப்பணியின் போதும் சென்ற மூன்று இடங்களாவன
    1) செதுக்கியா, சாலமி, பாப்போ
    2) எருசலேயம், பிலிப்பி, தெசலோணிக்கா
    3) தெருபை, லிஸ்திரா, இக்கோனியா
    4) இக்கோனியா, துரோவா, எபேசு

21. "யோனாவின் மகனான சீமோனே நீ பேறுபெற்றவன்" என இயேசு கூறியது
    1) சக்கேயுவிடம் 2) இடது பக்க கள்வனிடம்
    3) தூய பவுலுக்கு 4) தூய பேதுருவிடம்

22. "இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிகொள்ளா" இக் கூற்றிக்குரிய நபராவது
    1) தூய பேதுரு 2) தூய பவுல் 3) தூய யாக்கோபு 4) தூய யோவான்

23. தூய திருத்தந்தை 1ம் பிரான்சிஸ் அடிகளாரை கருதினால் பதவிக்கு உயர்த்தியவர்
    1) தூய திருதத்தை 6ம் சின்னப்பர் அடிகளார்
    2) தூய திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அடிகளார்
    3) தூய திருத்தந்தை 16ம் பெனடிக் அடிகளார்
    4) தூய திருத்தந்தை 23ம் அருளப்பர் அடிகளார்

24. தூய திருச்சபையின் ஒருமைப்பாட்டிற்கு ஊற்றாய் இருப்பது
    1) கிறிஸ்து 2) இறையன்பு
    3) மூவொரு கடவுள் ஒன்றிப்பு 4) இறைவார்த்தை

25. "பரத்தைமையில் ஈடுபடுவோர் தம் சொந்த உடலுக்கெதிராகவே பாவம் செய்கின்றனர். உங்கள் உடல் நீங்கள் கடவுளிடம் பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவில்"............
    இவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பது
    1) உரோமர் திருமுகம் 2) பிலமோன் திரு முகம்
    3) 1 செலோனிக்கா திருமுகம் 4) 1 கொரிந்தியர் திருமுகம்

26. அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவும் வேண்டுகின்றேன்."
    இவ்வாறு இயேசு வேண்டுதல் செய்தது
    1) எதிர்கால திருச்சபைக்காக
    2) ஆதி திருச்சபைக்காக
    3) தெரிவு செய்யப்பட்ட சீடர்களுக்காக
    4) தெரிவு செய்யப்பட்ட திருத்தொண்டர்களுக்காக

27. தூய திருச்சபையின் பொதுத்தன்மையை குறித்து நிற்பது
    1) ஏகம் 2) கத்தோலிக்கம் 3) பரிசுத்தம் 4) அப்போஸ்தலிக்கம்

28. கத்தோலிக்கம் உலகெங்கும் வளச்சியடையக் காரணமாக அமைவது
    1) திருமுழுக்கு அருளடையாளம் 2) இறையன்பின்படி வாழுவது
    3) நற்செய்தி அறிவிப்பு 4) மன்னிப்பு அளிப்பது

29. கிறிஸ்தவ மதத்தை பரப்பவும், கத்தோலிக்க திருச்சபையை நிறுவவும் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது

1) ஒல்லாந்தர் காலத்தில் 2)ஆங்கிலேயர் காலத்தில்
3) சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் 4) போர்த்துக்கேயரின் காலத்தில்

30. இன்னாட்டிற்கு வருகை தந்த மறைபோதக குழுக்கள் ஆற்றிய சேவையில் சிறப்பிடம் வழங்கப்பட்ட சேவையானது

1) கல்விச் சேவை 2) சுகாதார சேவை
3) அநாதை இல்லச் சேவை 4) வயோதிபர் மட சேவை

31. கி.பி. 1658ல் இன்னாட்டிற்கு வருகை வந்த ஐரோப்பிய இனத்தவர்கள்

1) போர்த்துக்கேயர் 2) ஒல்லாந்தர்
3) பிரித்தானியர் 4) பிரான்சியர்

32. பிரான்சிஸ்கன் கன்னியர் சபை மறைபரப்பிற்காக வருகைதந்த காலப்பகுதியாவது

1) போத்துக்யேர் காலம் 2) ஒல்லாந்தர் காலம்
3) பிரித்தானியர் காலம் 4) சுதந்திர காலம்

33. சிலாப மறை மாவட்டத்தில் சேவையாற்றி இறைபதம் அடைந்த ஆயர்களில் ஒருவர்

1) மேதகு லியோ நாணயகார ஆண்டகை
2) மேதகு டொன் சில்வெஸ்டர் ஆண்டகை
3) மேதகு வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை
4) மேதகு பிராங் மார்க்கஸ் பர்னாந்து ஆண்டகை

34. இயேசுவின் உடலை அடக்கம் செய்ய முன்வந்தவர்

1) சீரோன் ஊர் சீமோன் 2) திருத் தொண்டர்கள்
3) அரிமத்தியா ஊர் யோசேப்பு 4) மரிய மகதலா

35. ‘சலோமி’ என குறிப்பிடப்படும் தேசம்

1) பெத்லேகம் 2) எருசலேயம்
3) கானான் ஊர் 4) நயீம் பட்டணம்

36. ஞாயிறு திருப்பலியானது எம்மை

1) கல்வாரிப்பலியில் பங்கு கொண்டு, சகோதர அன்புடன் வாழ அழைப்பு விடுக்கின்றது
2) நற் கருணையில் பங்குகொண்டு தன்னை மட்டும் அன்புடன் வாழ அழைப்புவிடுக்கின்றது
3) பத்துக்கட்டளையை நிறைவேற்ற அழைப்பு விடுக்கின்றது
4) மக்களை நல்வழிப்படுத்த அழைப்பு விடுக்கின்றது

37. “அருளடையாளங்களில் அருளடையாளம்” என அறிமுகப்படுத்தப்படும் அருளடையாளமானது

1) திரு முழுக்கு 2) நற்கருணை 3) உறுதிப்பூசுதல் 4) குருத்துவம்

38. யூத வழிபாட்டு முறைகளை நிறைவு படுத்திய பலியானது

1) சீனாய் உடன்படிக்கை 2) பாவ நிவாரணப் பலி
3) கல்வாரிப் பலி 4) ஆபிரகாமின் பலி

39. புனிதை அன்னை திரோசா பிறந்த இடமாவது

1) கொல்கொத்தா 2) போலாந்து 3) நோர்வே 4) அல்பேனியா

40. இஸ்ராயேலரின் பலிகளின் பிரதான இரு பிரிவுகளுமாவன

1) எரிபலி - தானியப்பலி 2) எரிபலி - கால்வாரிப் பலி
3) நல்லுறவுப் பலி - கல்வாரிப்பலி 4) தானியப்பலி - நல்லுறவுப் பலி

සියලුම හිමිකම් ඇවිරිනි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

**கத்தோலிக்கத் திருமறை / කතෝලික ධර්මය ~ II**

தரம் : **10** நேரம்: 2 மணித்தியாலங்கள்

- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக**

1. 1) தூய பவுலின் பெயரைப் பயன்படுத்தி வேறு நபர்கள் எழுதிய இரண்டு திருமுகங்களைக் குறிப்பிடுக.
 2) இயேசு சிலுவை மரத்தில் தொங்கியபோது பேசிய திரு வசங்கள் இரண்டை எழுதுக.
 3) திருத்தொண்டர்களை நியமிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட்ட இரு பண்புகள் எவை?
 4) தூய பவுல் திருமுகங்கள் மூலம் நிறைவேற்றிய இரு காரியங்களை எழுதுக.
 5) தூய பேதுருவிற்கு இயேசு அளித்த அதிகாரங்கள் இரண்டு எழுதுக.
 6) தூய திருச்சபையின் கண்கானும் தலைவரை அழைக்கக் கூடிய இரு பெயர்களை எழுதுக.
 7) ஆங்கிலேயர் காலத்தில் இன்னாட்டிற்கு வருகை தந்த இரு மறைபரப்புச் சபையினரைக் குறிப்பிடுக.
 8) இறைவன் இஸ்ராயேல் மக்களுக்கு விடுதலைப் பயணத்திற்கு முன் வழங்கிய இரு அறிவுரைகளைக் குறிப்பிடுக.
 9) குறோசிங் த திறஷ்கோல்ட் ஓப் றோப், போர் வீரர் என்ற நூல்களின் ஆசிரியர்கள் யார்?
 10) கத்தோலிக்க திருமடலின்படி செபத்தின் பண்புகளில் இரண்டை தருக.

(2x10=20 புள்ளிகள்)

2. 1) புதிய ஏற்பாட்டு நூல்கள் வகைப்படுத்தப்பட்டுள்ள பிரிவுகளில் இரு பிரிவுகளைக் குறிப்பிடுக.
 2) திருமுகங்கள் எழுதிய திருத்தூதர்கள் மூவரின் பெயர்களை எழுதுக?
 3) தூய திருச்சபையின் வளர்ச்சிக்காக கிறிஸ்தவ மாணவராகிய நீர் உமது இலக்கிய, எழுத்தாற்றல் திறமையை பயன்படுத்தக்கூடிய வழிமுறைகளை ஐந்து காரணம் தந்து விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

3. 1) இயேசு உயிர்விட்ட போது நிகழ்ந்த சம்பவம் இரண்டு எழுதுக.
 2) உயிர்த்த இயேசு சீடர்களுக்கு காட்சிகொடுத்த மூன்று சந்தர்ப்பங்களை குறிப்பிடுக
 3) எல்லா மகிமையும் நிறைந்த விண்ணரசில் உயிர்த இயேசுவைக் காண்பதற்கு நீர் செய்யவேண்டிய நற்செயல்கள் 5 எழுதுக.

(2+3+5=10 புள்ளிகள்)

4. 1) தற்போதைய திருத்தந்தையின் திருமுழுக்குப் பெயரையும், திருத்தந்தையானதன் பின்னரான பெயரையும் எழுதுக.
   2) மூன்றாம் தூதுரைப் பயணத்தின் பின் தூய பவுல் எதிர்கொண்ட சவால்கள் மூன்று எழுதுக.
   3) வகுப்புத் தலைவனாக, மாணவத்தலைவனாக நீர் பாடசாலையில் நல்ல ஆயனாக செயற்படக்கூடிய விதத்தினை ஐந்து காரணம் தந்து எழுதுக.

(2+3+5=10 புள்ளிகள்)

5. 1) "அப்போஸ்தலிக்கம்" என்பதனுள் உள்ளடக்கப்பட்டுள்ள இரு பிரிவினரும் யார் என எழுதுக.
   2) திருச்சபையின் பண்புகளில் மூன்றை தருக.
   3) பொதுக் குருத்துவம் மூலம் தூய வாழ்வு வாழ்வதற்கு நீர் உமது பங்கில் ஆற்றக்கூடிய நற்செயல்கள் 5 தருக.

(2+3+5=10 புள்ளிகள்)

6. 1) தூய யோசப்வாஸ் அடிகளாரின் பெற்றோர்களின் பெயர்களைத் தெளிவாக குறிப்பிடுக.
   2) இலங்கையின் மறை மாவட்டங்கள் மூன்று தருக.
   3) உண்மையாகவே கிறிஸ்துவை பின்பற்றும் மாணவன் என்றவகையில் நீர் உமது வகுப்பறையில் செயற்படும் முன்மாதிரிகையான நற்பண்புகள் 5 குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றில் இரண்டிற்கு மட்டும் சிறு குறிப்பு எழுதுக.
   1) பழைய ஏற்பாட்டு பாஸ்கா விருந்து
   2) புதிய ஏற்பாட்டு பாஸ்கா உணவு
   3) புனிதை அன்னை திரேசா
   4) அருட் - யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகள்

(2x5=10 புள்ளிகள்)